සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Saivanery

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	**சைவநெறி**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 – 5 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. மருதடி விநாயகர் ஆலயம் அமைந்தள்ள இடம் ……..
   1. மானிப்பாய் 2. மனிப்பூர்
   3. தெல்லிப்பளை 4. மல்லாகம்

2. உத்தராயணத்தின் தொடக்க நாளான முதல் நாள் கொண்டாடப்படும் பண்டிகை.
   1. தீபாவளி 2. தைப்பொங்கல்
   3. வருடப்பிறப்பு 4. மாட்டுப்பொங்கல்

3. புனித நதியான கோதாவரியில் ஒரே நாளில் நூற்றியெட்டு முறை நீராடும் பேற்றினைல் பெற்றவர்……
   1. கச்சியப்பர் 2. கர்ணன்
   3. ஏகநாதர் 4. அநபாய சோழன்

4. சிவனடியார்களின் பெருமை, பக்தி சிறப்பு பற்றிய சைவப் பெருங்காப்பியமாகப் படைக்கப்பட்ட புராணம்.
   1. திருத்தொண்டர் புராணம் 2. சிவபுராணம்
   3. விஷ்ணு புராணம் 4. சக்தி புராணம்

5. "அன்ன நடையார் அமுத மொழியார்.." எனும் பதிகத்தின் பண்…
   1. நட்டராகம் 2. நட்டபாடை
   3. காந்தாரம் 4. இந்தளம்

(2x5=10 புள்ளிகள்)

02. சரியான விடையினைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

6. ஆலயத்தினை நோக்கிவரும் அடியவர்கள் கோபுரத்தைக் கண்டவுடன் இரு கரங்களையும் கூப்பி ……. செய்தல் வேண்டும்.

7. சம்பந்தர் சமணர்களுடன் அனல் வாதம் செய்து தீயிலிட்ட ஏட்டை …… என ஆரம்பிக்கும் பதிகம் பாடினார் எரியாது காத்தார்.

8. பொன்னாம்பலவாணேச்சரத்தை கற்றளியாகக் கட்டிய பெருமை ……. சேரும்.

Past Papers Wiki

9. ..... பாவங்களில் இருந்து நீங்கி இறை அருளைப் பெற்றே முத்தியடையும்.

10. இலங்கையை சிவபூமி என சிறப்பித்துக் கூறியவர் ..... ஆவார்.

(2x5=10 புள்ளிகள்)

ஆன்மாக்கள் / தளிர் இளவளரொளி / திருமூலர் / திரியாங்க நமஸ்காரம் / சேர்.பொன்.இராமநாதன்.

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

11. நாகர்களால் சிறப்புப் போற்றி வணங்கப்பட்டு வந்த தலமாக திருக்கேதீஸ்வரம் திகழ்கின்றது. (.....)

12. காரைக்காலம்மையார் சங்கமருவிய காலப் பிற்பகுதியில் வாழ்ந்தவர். (.....)

13. திருமுறைப் பாடல்கள் ஞானத்தை வழங்கி முக்திக்கு இட்டுச் செல்பவை. (.....)

14. நாட்டார் வழிபாடு கிராமிய மக்களின் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறாது காணப்படுகிறது. (.....)

15. சொரூபலக்கணத்தில் கடவுள் குணங்குறிகளோடு காணப்படும். (.....)

(2x5=10 புள்ளிகள்)

04. சரியான விடையுடன் தொடர்புபடுத்துக.

16. விஜயனால் கட்டப்பட்ட பழைமை வாய்ந்த அலயம் — கர்ணன்

17. பிராமணர்கள் வேதம் ஓதவதற்கென்று அமைக்கப்பட்டது. — திருவிசைப்பா

18. "இறவாமல் பிறவாமல்" என்னும் திருப்புகழ் பாடற் பெற்ற திருத்தலம் — நகுலெஸ்வரம்

19. இறைவனின் பெறுமைகளைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல்கள் — சொத்திசாலை

20. நன்றி மறவாப் பண்பிற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் — கதிர்காமம்

(2x5=10 புள்ளிகள்)
(மொத்தம் = 40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா உட்பட ஏனைய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் திருமறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர், தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

அ. "குழலொலி யாழொழி..."
ஆ. "அம்மையே அப்பா ஒப்பிலா..."
இ. "பொன்னார் மேனியனே..."
ஈ. " இறவமால் பிறவாமல்.."

(2x6=12 புள்ளிகள்)

02. "சைவசித்தாந்தம் முப்பொருள்கள் பற்றி கூறுகின்றது"
1. உலகத்துப் பொருட்கள் எல்லாம் முக்கிய மூன்று பிரிவினுள் அடங்கும், அவற்றைக் குறிப்பிடுக.
2. கடவுளுக்குரிய இரு நிலைகளையும் குறிப்பிடுக.
3. கடவுளுக்குரிய எண்குணங்களையும் தருக?

(12 புள்ளிகள்)

03. "சைவசமயத்தவரின் பெருஞ்சொத்து திருமுறைகளாகும்"
1. திருமுறை என்றால் என்ன?
2. திருமுறைப் பாடல்களளின் சிறப்புக்கள் 4 தருக?
3. திருமுறைகளைப் பாடுவதனால் நாம் அடையும் பயன்கள் 4 தருக?

(12 புள்ளிகள்)

04. தமிழர்கள் நாட்டார் வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள்.
1. நாட்டார் வழிபாடு என்றால் என்ன?
2. நாட்டார் வழிபாட்டிற்கு வழங்கப்படும் மறுபெயர்கள் 4 தருக?
3. முனியப்பர் வழிபாடு நடைபெறும் ஆலயங்கள் இரண்டையும் அங்கு மேற்கொள்ளப்படும் சடங்குகள் இரண்டையும் குறிப்பிடுக?

(12 புள்ளிகள்)

05. "மேன்மை கொள் சைவநீதி உலகமெல்லாம்"
1. பண்டுகாபய மன்னன் அநுராதபுர நகரை அமைத்த போது நிர்மானித்த இரு நிலயங்களும் அதற்கான காரணங்களையும் குறிப்பிடுக?
2. விஜயன் இலங்கைக்கு வருவதற்குகு முன்பே காணப்பட்ட பஞ்ச ஈஸ்வரங்களைக் குறிப்பிடுக.
3. யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்திகள் காலத்தில் சைவம் இலங்கையில் தழைத்தோங்கி வளர்ந்தமைக்கான சான்றுகள் 2 குறிப்பிடுக?

(12 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் ஏதேனும் 2 ற்கு சிறு குறிப்பு எழுதுக.
1. கொத்துக்குளம் முத்துமாரியம்மன் ஆலயம்
2. சேர். போன். இராமநாதன்
3. சுற்தரமூர்த்தி நாயனார்
4. காரைக்கால் அம்மையார்

(12 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாந் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** சைவநெறி

Saivam விடைப்பத்திரம் - 7

01. 1
02. 2
03. 3
04. 1
05. 4
06. திரியாங்க நமஸ்காரம்
07. தளிர் இளவளரொளி
08. சேர். பொன். இராமநாதன்
09. ஆன்மாக்கள்
10. திருமூலர்
11. √
12. √
13. √
14. X
15. X

16. நகுலேஸ்வரம்
17. சொத்திசாலை
18. கதிர்காமம்
19. திருவிசைப்பா
20. கர்ணன்

பகுதி – ii

01. வரிக்கிரமமாக எழுதி பாடியவர், தலம் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.
(12 புள்ளிகள்)

02. 1. அறிவிக்காமலே அறியும் பொருள்.
அறிவித்தால் மட்டும் அறியும் பொருள்.
அறிவித்தாலும் அறிய மாட்டாத பொருள்.

2. தடத்த லக்கணம்
சொரூப லக்கணம்

3. 1. தன்வயத்தினராதல்
2. இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குபவர்.
3. தூயவுடம்பினனாதல்
4. இயற்கையுணர்வினனாதல்
5. பேரருளுடைமை
6. வரம்பிலின்பமுடைமை
7. வரம்பிலாற்றலுடைமை
8. முற்றுமணர்தல்

(12 புள்ளிகள்)

03. 1. 'திரு' என்பது அழகு, தெய்வீகம், மங்கலம், மேன்மை எனவும் 'முறை' என்பது ஒழுங்கு, வரிசை, ஒழுக்கம், உறவு எனவும் தெய்வீக உணர்வு பெருக, சமய ஒழுக்கத்தைப் பேணும் நோக்குடன் தொகுக்கப்பட்ட உயர்வான நூல்கள் திருமுறைகளாகும்.

2. * திருமுறைகள் தெய்வசக்தி வாய்ந்தவை.
* நோய் தீர்ப்பவை
* நல்வினைகளை பெருக்குபவை.
* இறைவன் மீது பக்தியை ஏற்படுத்துபவை.

3. * மன நிம்மதி கிடைக்கும்.
* இறையுணர்வு பெருகும்.
* எடுக்கும் காரியம் நிறைவேறும்.
* தன் நம்பிக்கை பக்தி பெருகும்.

(12 புள்ளிகள்)

අ.පො.ස සාමාන්‍ය පෙළ විභාග ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් පත්‍ර/සාහිත්‍ය ලිපි Past Papers Wiki සඳහා විශේෂයෙන් පිවිසෙන්න

04. 1. ஆகம நெறிக்கு உட்படாத வழிபாடு நாட்டார் வழிபாடு என அழைக்கப்படும்.

2. * கிராமிய வழிபாடு
   * சிறு தெய்வ வழிபாடு
   * குல தெய்வ வழிபாடு
   * ஊர்த் தெய்வ வழிபாடு
   * மலைத்தெய்வ வழிபாடு

3. கோட்டை முனியப்பர் ஆலயம்.
   வல்லை வெளி முனியப்பர் ஆலயம்
   - வழக்கு, தூரப் பயணம் என்பவற்றில் வெற்றி உண்டாக.
   - நேர்த்தி வைத்து காசு கட்டுகின்ற வழக்கம்.

(12 புள்ளிகள்)

05. 1. * சிவிகசாலை
   * சொத்திசாலை
   * சிவிகசாலை சிவலிங்கத்தைத் தாபித்து வழிபடும் கோட்டமாகவும்.
   * சொத்திசாலை பிராமணர்கள் வேதம் ஓதுவதற்கு என்று அமைக்கப்பட்டது.

2. * திருக்கோணேஸ்வரம்
   * திருக்கேதீஸ்வரம்
   * முன்னேஸ்வரம்
   * நகுலேஸ்வரம்
   * சந்திரசேகர ஈஸ்வரம்

3. * அரசோச்சிய கணசிங்க ஆரியன் திருகோணமலையிலிருந்து கொண்டு சென்ற கருங்கற்களால் இராமேஸ்வரகர்ப்பக்கிரகத்தைக் கட்டுவித்தான்.
   * சேது காவலர் என்ற விருதுப் பெயருடன் முத்திரைக் காசுகளில் சேது என்ற எழுத்துடன் சிவபெருமானின் வாகனமாகிய நந்தி இருப்பது.

(12 புள்ளிகள்)

06. 1. பக்கம் - 123
2. பக்கம் - 94
3. பக்கம் - 87
4. பக்கம் - 46

(12 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank